# Kanchipuram District

**B**

## முதல் திருப்புதல் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி | உயிரியல் | மதிப்பெண்கள் : 70

உயிரி-தாவரவியல் | மதிப்பெண்கள்: 35

### பிரிவு - அ

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 8×1=8

1) பின்வரும் ஒன்று வழிமுறை வளர்ச்சியின் மூலமாக மண் தோன்றுதலுக்கும் மண்வளத்தினைப் பாதுகாப்பதிலும் பெரும் பங்காற்றுகின்றன

அ) ஆல்காக்கள் ஆ) டெரிடோஃபைட்டுகள்

இ) பிரையோஃபைட்டுகள் ஈ) ஆர்க்கி பாக்டீரியா

2) கேலிப்ட்ரோஜென் கீழ்காணும் எதனை உண்டாக்குகிறது

அ) வேர்மூடி ஆ) வேர்மூடிச்சு இ) சைலம் ஈ) ஃப்புளோயம்

3) உயிரி மண்டலத்தின் மிக அதிகஅளவு காணப்படும் புரதம்

அ) அல்புமின் ஆ) RUBISCO இ) இன்சுலின் ஈ) கொலாஜன்

4) உண்மை கனி என்பது

அ) மலரின் சூலகப்பை மட்டும் கனியாக உருவாவது

ஆ) மலரின் சூலகப்பை மற்றும் புல்லிவட்டம் கனியாக மாறுவது

இ) மலரின் சூலகப்பை, புல்லிவட்டம் மற்றும் பூத்தளம் கனியாக உருவாவது

ஈ) மலரின் அனைத்து வட்டங்களும் கனியாக உருவாவது

5) புரோட்டோப்ளாசம் தொடர்பான எந்தக் கூற்றுகள் சரியானவை

(i) மணமற்ற, ஒளி ஊடுருவக்கூடியது

(ii) படிக கூழ்ம கரைசல்

(iii) இதன் $p^H$ மதிப்பு கிட்டதட்ட 6.8

(iv) இதன் புரதம் மற்றும் லிப்பிடு குறைந்த பரப்பு இழுவிசை கொண்டது

அ) i ஆ) (i) & (ii) இ) (ii) & (iii) ஈ) (i), (ii), (iii) & (iv)

6) ஒரு பால் மலர்கள் கொண்ட தாவரங்களில் இந்த ஹார்மோன்களால் இனமாற்றம் நிகழ்கிறது.

அ) எத்தனால் ஆ) சைட்டோகைனின்

இ) ABA ஈ) ஆக்சின்

7) எவ்வகை பச்சையத்தில் பைட்டால் வால்பகுதி காணப்படுவதில்லை

அ) பச்சையம் a ஆ) பச்சையம் b

இ) பச்சையம் c ஈ) பச்சையம் d

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



8) கிளைக்காலைசிஸ் மற்றும் கிரப்ஸ் சுழற்சியினை இணைக்கும் இந்தச்சேர்மம்

அ) சக்சினிக் அமிலம் ஆ) பைருவிக் அமிலம்

இ) அசிட்டைல் CoA ஈ) சிட்ரிக் அமிலம்

பிரிவு - ஆ

II. கீழ்காணும் வினாக்களில் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி:- 4×2=8

9) தமிழ்நாட்டு மாநில மலரின் இருசொற்பெயர் மட்டும் அதன் குடும்பத்தை குறிப்பிட்டு அத்தாவரத்தின் பொருளாதார முக்கியத்துவத்தை எழுதுக.

10) எந்த பருவத்தில் ஆஞ்சியோஸ்பெர்ம்களின் வெசல்கள் பெரியதாக இருக்கும்? ஏன்?

11) நீர்வடிதல் என்றால் என்ன?

12) எர்வின் சர்காப் விதியை விளக்குக.

13) வரையறு - முன் உடலம்

14) பூஞ்சை வேரிகள் என்றால் என்ன?

பிரிவு -இ

III. கீழ்காணும் வினாக்களில் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். 19க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 3×3=9

15) வகைப்பாட்டியலின் தந்தை என போற்றப்படுபவர் யார்? அவருடைய வகைப்பாடு ஏன் பாலின வழி வகைப்பாடு என்று அழைக்கப்படுகிறது?

16) பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஃபுளோயம் நார்களை தருவிக்கும் ஏதேனும் மூன்று தாவரங்களையும், அவற்றின் நார்களையும் எழதுக.

17) நொதிகளின் பயன்களை எழுதுக.

18) மியாஸிஸ்சின் முக்கியத்துவத்தை எழுதுக.

19) பாசிகளில் பசுங்கணிகத்தின் வடிவம் தனித்துவம் வாய்ந்தது எனக் கருதுகிறாயா? உனது விடையை நியாயப்படுத்துக.

பிரிவு -ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2×5=10

20) அ) டாட்டூரா மெட்டல் தாவரத்தை கலைச்சொற்களால் விவரி? (அல்லது)

ஆ) DNA வின் படம் வரைந்து அதன் சிறப்பியல்புகளை விவரி.

21) அ) மைட்டாஸிஸ்க்கும் மியாசிஸ்க்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை எழுதுக.

(அல்லது)

ஆ) கிளைக்காலிஸின் படிநிலைகளை எழுதவும்

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

(3) XI உயிரியல்

உயிரி-விலங்கியல் மதிப்பெண்கள்: 35

பிரிவு - அ

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 8×1=8

1) மூலக்கூறு வகைப்பாட்டின் கருவியில் இது அடங்கியுள்ளது
அ) டி.என்.ஏ. & ஆர்.என்.ஏ
ஆ) மைட்டோகாண்டிரியா மற்றும் எண்டோபிளாச வலை
இ) செல்சுவர் மற்றும் பிளாஸ்மா புரோட்டின்
ஈ) மேற்கூறிய அனைத்தும்

2) பிறந்த குழந்தைகளில் உடல்நடுக்கம் ஏற்படுத்தாமல் வெப்ப உற்பத்தி செய்து உடல் வெப்பம் அதிகரிப்பது எதன்மூலம்?
அ) வெள்ளைக்கொழுப்பு ஆ) பழுப்புக் கொழுப்பு
இ) மஞ்சள் கொழுப்பு ஈ) நிறமற்ற கொழுப்பு

3) கணைய நீர் மற்றும் பைகார்பனேட் உருவாதலைத் தூண்டும் ஹார்மோன்
அ) ஆஞ்சியோடென்சின் மற்றும் எபிநெஃப்ரின்
ஆ) கேஸ்ட்ரின் மற்றும் இன்சுலின்
இ) கோலிசிஸ்டோகைனின் மற்றும் செக்ரிடின்
ஈ) இன்சுலின் மற்றும் குளுக்கான்

4) உட்சுவாசத்தின் போது உதரவிதானம்
அ) விரிவடைகிறது
ஆ) எந்த மாற்றமும் இல்லை
இ) தளர்ந்து மேற்குவிந்த அமைப்பைப் பெறுகிறது
ஈ) சுருங்கித் தட்டையாகிறது

5) ஆண் மற்றும் பெண் கரப்பான்பூச்சியில் எத்தனை வயிற்றுக் கண்டங்கள் காணப்படுகின்றன.
அ) 10,10 ஆ) 9, 10 இ) 8, 10 ஈ) 9, 9

6) ஆக்சிஜன் பிரிகை நிலைவளைவின் வடிவமானது
அ) சிக்மாய்டு ஆ) நேர்க்கோடு
இ) வளைந்தது ஈ) நீள்சதுர மிகைவளைவு

7) ஒடி (oddi) சுருக்குத்தசை எதனைப் பாதுகாக்கிறது?
அ) கல்லீரல் - கணைய நாளம் ஆ) பொதுப்பித்தநாளம்
இ) கணைய நாளம் ஈ) சிஸ்டிக்நாளம்

8) இஸின்கிளாஸ் எதில் பயன்படுத்தப்படுகிறது
அ) ஒயின் தயாரித்தல் ஆ) ஒயினை சுத்திகரிக்க
இ) ஒயினை வடிகட்டிப் பிரித்தல் ஈ) ஒயினைப் பதப்படுத்துதல்

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



பிரிவு - ஆ

II. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். 4×2=8

9) சிலவகை எபிதீலியங்கள் பொய்யடுக்கினால் ஆனவை. இதன் பொருள் என்ன?

10) கிரிடினிசத்தின் அறிகுறிகளைக் குறிப்பிடுக.

11) கரப்பான்பூச்சியின் தலை ஹைபோநேத்தஸ் வகையாகும் ஏன்?

12) குருட்டுப்புள்ளி எனப்படுவது எது? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?

13) கோலி சிஸ்டோகைனின் (CCK) பணிகளைக் குறிப்பிடுக?

14) ஒரு பேஸ்மேக்கர் என்ன செய்கிறது?

பிரிவு - இ

III. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.

வினா எண். 19க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 3×3=9

15) நிமோனியா ஏன் ஒரு ஆபத்தான நோயாகக் கருதப்படுகிறது?

16) கடல் மட்டத்திற்கு மேல் அதிக உயரத்தில் நீண்டநாள் வாழ ஒருவரின் உடல் எவ்வாறு சரிசெய்து கொள்கிறது?

17) லிம்பிக் மண்டலம் ஏன் உணர்ச்சி மூளை எனப்படுகிறது? அதன் பகுதிகளைக் கூறு?

18) சிறுநீரகத்தின் மீது ஆல்டோஸ்டீரோனின் விளைவு யாது? மற்றும் அது எங்கே உருவாகிறது?

19) டெர்கம் மற்றம் ஸ்டெர்னம் ஆகியவற்றை வேறுபடுத்துக.

பிரிவு - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2×5=10

20) அ) ஆண் மற்றும் பெண் கரப்பான்பூச்சியை வேறுபடுத்துக.

(அல்லது)

ஆ) மிட்ரல் வால்வு மற்றும் அரைச்சந்திர வால்வுகளை வேறுபடுத்துக.

21) அ) தசைச்சுருக்கத்திற்கான சறுக்கு - இழைக் கோட்பாட்டை விளக்கு

(அல்லது)

ஆ)அல்ட்ரா சோனோகிராமின் மருத்துவ முக்கியத்துவத்தைக் கூறுக.

****/****

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com